### காங்கேயம் நகராட்சி முத்தூர் பேரூராட்சி பகுதிகளில்

# ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 27-

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி மற்றும் முத்தூர் பேரூராட்சிக் குட்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி மற்றும் முத்தூர் பேரூராட்சிக் குட்பட்ட பகுதியில் 22.03.2025 சனிக்கிழமை அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி தலைமையில்

காங்கேயம் நகராட்சி, வார்டு எண்.13 அண்ணாநகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் பல் நோக்கு மைய கட்டடம் கட்டும் பணி, அய்யாசாமி நகரில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் வார்டு எண்.1, திரு.வி.க. நகர் 10 வது மெயின் வீதி, வார்டு எண்.2, சின்னாய்புதூர் ரோடு, வார்டு எண்.3, மூர்த்திரெட்டிபாளையம் ஏடி காலனி முதல் வீதி, வார்டு எண்.4, திருவள்ளுவர் வீதி முதல் மெயின் வீதி, வார்டு எண்.5, பஜனைமடை வீதி முதல் மெயின் வீதி மற்றும் வார்டு எண்.6, தண்ணீர் தொட்டி வீதி பகுதியில் தார்சாலை சீரமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.7, சிவசக்தி விநாயகர் கோவில் வீதி முதல் மெயின் வீதி, வார்டு எண்.9, காளியப்பா மருத்துவமனை ரோடு, வார்டு எண்.12, அய்யாசாமி நகர் காலனி 2வது மெயின் வீதி, வார்டு எண்.13, கே.ஜி.கே. நகர் முதல் மெயின் வீதி, வார்டு எண்.17 தாராபுரம் ரோடு முதல் அகிலாண்டபுரம் வரை உள்ள பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் பணிகள் மற்றும் முத்தூர் பேரூராட்சி சின்ன முத்தூர் பகுதியில் நீர்வளத் துறை யின் சார்பில் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் சின்ன முத்தூர் கிராமம், ஆத்துப் பாளையம் நீர்த்தேக்கத் திட்டத்தின் தலைப்பு ஒழுங்காக்கி மற்றும் காட்டுக் கால்வாய் புனரமைக்கும் பணி என மொத்தம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முத்தூர் பேரூராட்சி, சின்ன முத்தூரில் மலையாத்தாள் ஓடை முத்தூர் தடுப்பனை புனரமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், நகர செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன் காங்கேயம், சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளக்கோவில், ஒன்றியச் செயலாளர் எஸ்.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், முத்தூர் பேரூர் செயலாளர் செண்பகம் பாலு, காங்கேயம் நகர்மன்றத் தலைவர் சூரியபிரகாஷ், பொதுக் குழு முன்னாள் உறுப்பினர் எ.எஸ்.கே.கார்த்திகேயன், முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம், காங்கேயம் வட்டக் கழக செயலாளர்கள் முத்துரத்தினம், மணி, ரவிச்சந்திரன், சௌந்தர்ராஜன், பொன்னுச்சாமி, செல்வராஜ், ராஜா, வெள்ளியங்கிரி, மீசை பாலு, வரதராஜ், முத்தூர் பேரூராட்சி துணை தலைவர் மு.க.அப்பு, முன்னாள் துணைத் தலைவர் பௌத்தியப்பன், காங்கேயம் நகர அவைத்தலைவர் பழனிச்சாமி, துணை செயலாளர்கள் எம்.எஸ். சுப்பு, மகேஸ்வரி, பொருளாளர் செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் பரமேஷ், ஷோபனா சிவலிங்கம், நகர்மன்ற உறுப்பினர்கள் கமலவேணி, வளர்மதி குருசாமி, ஷோபனா, நித்திய கதிர், மீனாட்சி அண்ணாதுரை, ராஜாத்தி பரமேஷ், கவிதா சௌந்தர்ராஜன், வாணி சிவகுமார், சிலம்பரசன், இப்ராஹிம் கலீல்லுல்லா, ஜெயசித்திரா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சிவராஜா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் உமாபதி சிறுபான்மையினர் அணி தலைவர் சலீம், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சதீஸ்குமார், காங்கேயம் நகராட்சி ஆணையாளர் பால்ராஜ், உதவி பொறியாளர்கள் பரமத்தி, சதீஸ்வரன், குமரேசன், காங்கேயம் நகராட்சி பொறியாளர் குணசீலன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, காளிபாளையத்தில் கொளத்துபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நபார்டு திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், அரசு பள்ளிகள் பராமரிப்பு செய்தல், புதிய நூலக கட்டடம் கட்டுதல், 15வது நிதிக்குழு மானியத்திட்டம், பொது நிதி வேலைகள் திட்டம் ஆகிய திட்டத்தின் கீழ் பல்வேறு புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா,தாராபுரம் ஒன்றியச் செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் கொளத்துப்பாளையம் பேரூர் செயலாளர் கே.கே.துரைசாமி, பேரூராட்சித் தலைவர் சுதா கருப்புசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

### ஒன்றிய அரசு

# அமெரிக்காவுடன் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளதா?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 26-

அமெரிக்கா உடனான புதிய வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் அமெரிக்கா இஸ்ரேலில் இருந்து செயல்மிகு மருந்து மூலப் பொருட்கள் மற்றும் முக்கியமான இரசாயன சேர்மங்களின் இறக்குமதி விவரங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திமுகவின் வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அமெரிக்காவுடன் ஒன்றிய அரசு ஏதேனும் புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதா அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

அமெரிக்கா சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து தடை செய்யப்பட்ட சில பொருட்களின் இறக்குமதி மீதான தடையை ஒன்றிய அரசு நீக்கியுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

வர்த்தகத்தில் சீனாவை பெருமளவில் சார்ந்திருப்பதைக் குறைக்க செயல்மிகு மருந்து மூலப் பொருட்கள் மற்றும் முக்கியமான இரசாயன சேர்மங்களை வழங்குவதற்காக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிடமிருந்து ஆதரவைப் பெற ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மொத்த மதிப்பு (இந்திய பண மதிப்பில்) என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாத மக்களவையில் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு

இந்தியாவும் அமெரிக்காவும் பிப்ரவரி 13, 2025 அன்று ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன பரஸ்பர நன்மை பயக்கும் பல துறை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை (BTA) பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவித்தன. சமீபத்தில் அமெரிக்கா சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து சில தடைசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான தடையை நீக்குவதற்கு ஒன்றிய அரசு அத்தகைய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான 6வது வணிக உரையாடலின் போது இரு நாடுகளின் வர்த்தக அமைச்சர்களும் உள்நாட்டு மருந்து உற்பத்தி திறன்களை ஆதரிக்கும் விநியோகச் சங்கிலி நெட்வொர்க்குகளை நிவர்த்தி செய்வதற்கான தங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்த கூடுதல் தகவல் பரிமாற்றத்தில் பகிரப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தினர். இது செயல்மிகு மருந்து மூலப் பொருட்கள் (API) தொழில்துறை தளத்தின் தற்போதைய நிலை உற்பத்தி திறன்கள் மற்றும் அவசரகால பதிலளிப்பு திறன்களை வலுப்படுத்தும் நோக்கில் உள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலில் இருந்து மருந்து பொருட்கள் மற்றும் முக்கியமான இரசாயன சேர்மங்களின் இறக்குமதி விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

இந்தியாவின் செயல்மிகு மருந்து மூலப் பொருட்கள் மற்றும் வேதியியல் சேர்மங்களின் இறக்குமதி விவரங்களை அவர் வெளியிட்டார்.

### புதுக்கோட்டை தொகுதி – வடவாளம் ஊராட்சி –

# சின்னையா சத்திரத்தில் துணை மின் நிலையம் விரைந்து நிறுவிடுவீர்!

## சட்டப் பேரவையில் – டாக்டர் வை.முத்துராஜா வலியுறுத்தல்!

சென்னை,மாச்.27-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, புதுக்கோட்டை தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் வை.முத்து ராஜா, “புதுக்கோட்டை தொகுதி - வடவாளம் ஊராட்சி - சின்னையா சத்திரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை விரைந்து நிறைவேற்றிடுவீர்” என வேண்டுகோள் விடுத்தார்.



சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**டாக்டர் வை. முத்து ராஜா:** புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடவாளம் ஊராட்சி, சின்னையா சத்திரத்தில் அண்மையில் அரசு அறிவித்த துணை மின்நிலையத்தை விரைந்து செயல்படுத்திக் கொடுத்தால், அருகிலுள்ள புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு கால்நடைப் பண்ணை, புதிதாக அமையவுள்ள முள்ளூர் துணைக்கோள் நகரம், புதுக்கோட்டை SIDCO தொழிற்பேட்டை மற்றும் சுற்றுவட்டார விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேற்கண்ட பணிகளுக்கு நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளைத் தொடர அரசு முன்வருமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தத் துணை மின் நிலையத்திற்கு 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு மின் வாரியத்திற்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. 250 துணை மின் நிலையங்களிலும் அதற்கான துணை மின் நிலையங்களும் இடம் பெற்றிருக்கிறது. எனவே, விரைவில் அதற்கான பணிகளைத் துறைரீதியாக தொடங்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### சட்டமன்றத்தில் அறிவிப்பு!

# பெரம்பலூர் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்!

## மாவட்ட மக்களின் சார்பில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் நன்றி!

பெரம்பலூர், மார்ச்,27-

பெரம்பலூர் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 25.03.2025, செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை அறிவிப்புகளில், பெரம்பலூர் மாவட்டம், குரும்பலூர் பேரூராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி பணிகள், பூலாம்பாடி பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டிடம், பெரம்பலூர் நகராட்சிக்கு நவீன எரிவாயு தகன மேடை, பெரம்பலூரை மாநகராட்சியாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் எப்போதும் பெரம்பலூர்க்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் என்பது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து மாவட்டம் வளர்ச்சி பாதையில் சென்று கொண்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள், வணிகர்கள் உள்ளிட்டோர் மகிழ்ச்சியடையும் வகையில் மாநகராட்சியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் உறுதுணையாக இருந்த அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் பெரம்பலூர் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில், ஒன்றிய அரசைக்கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்,பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம் இந்திரா காந்தி சாலையில் நடைபெற்றது. பண்ருட்டி நகர கழக செயலாளர்,நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கினார். இளைஞரணி செல்வ.துரைராஜ், ஆ.சதாம் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், செ.புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் சி.வெ.கணேசன், கழக இளைஞரணி துணை அமைப்பாளர் ப.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், தலைமைக்கழக பேச்சாளர்கள் ப.மீ.யாழினி, க.முல்லைவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர இளைஞரணி அமைப்பாளர் அ.சம்பத் நன்றியுரையாற்றினார்.

### தமிழ்நாடு அரசு நடத்தும் சமுதாய வளைகாப்பு விழா!

# “கருவிலிருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்துக் கேட்கும் பெருமைக்குரியவர்கள்!”

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. உரை!

சென்னை,மார்ச்.27-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் எழும்பூர் தொகுதி, புரசைவாக்கம், கம்மவார் கல்யாண மஹாலில் நேற்று நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவினை நடத்தி வைத்த கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், “தமிழ்நாடு அரசே நடத்தும் இவ்விழாவில் கலந்துகொள்ளும் கர்ப்பிணித் தாய்மார்களின் கருவிலிருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்து கேட்கும் பெருமைக்குரியவர்கள்” எனக் குறிப்பிட்டார்.



இவ்விழாவில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், “சமுதாய வளைகாப்பு விழா, மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற பெண்களுக்கான சிறப்புத் திட்டங்களை மகளிர் மேன்மைக்காகத் திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிவருகிறார்கள். மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. இவை போன்ற பெண்களுக்கான தனித்த திட்டங்கள் நாட்டில் வேறெங்குமே இல்லை. இப்போதுதான் நம்மைப் பார்த்து வடமாநிலங்களில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை அமல்படுத்துகிறார்கள்.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்தால்தான் அவர்களின் எதிர்காலம் வளமாகும். இதனைக் கருத்தில் கொண்டுதான் சமுதாய வளைகாப்பு விழா நடத்தும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்தார். கலைஞரின் வழியில் வந்த நம் முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். வசதி படைத்த கர்ப்பிணித் தாய்மார்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை எடுத்துக் கொண்டுவிடுவார்கள். ஆனால், ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்க வாய்ப்பில்லை என்பதைக் கருத்தில் கொண்டே இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுவருகிறது. எத்தனையோ கட்சிகள் இருக்கலாம்; புதிதாக கட்சிகள் வரலாம், எனினும், கழக ஆட்சியில்தான் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கு மான திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. தமிழக அரசே உங்களுக்கு வளைகாப்பு நடத்துவது என்பதும், கருவில் இருக்கும் சிசுக்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைக் கேட்பது என்பதும் பெருமைக்குரிய விஷயம்.

பெண்கள் தங்கள் குடும்பத்தில் தனது தந்தையையோ, கணவரையோ, சகோதரரையோ ஹீரோவாகப் பார்க்கலாம். ஆனால், பொதுவாழ்வில் பெண்களின் உண்மை யான ஹீரோ இருவர் மட்டுமே. ஒருவர் 1924ஆம் ஆண்டிலேயே பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை தேவை என்பதைத் தீர்மானமாக நிறைவேற்ற, அப்போதைய சனாதன தலைவர்கள் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சியை வலியுறுத்தியபோது, கட்சி மறுத்ததால் அக்கட்சியை விட்டே வெளியேறிய தந்தை பெரியார் ஒரு ஹீரோ. அதேபோல, 1953 இல் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, மணவிலக்கு உள்ளிட்டவற்றைச் சட்டமாக்க முயன்று, அது முடியாததால் சட்டத்துறை அமைச்சர் என்ற பொறுப்பையே உதறித்தள்ளிவிட்டு வெளியேறிய அண்ணல் அம்பேத்கர் மற்றொரு ஹீரோ. இவர்கள் இருவரைத் தவிர வேறு எவரையும் ஹீரோவாக நீங்கள் பார்க்கத் தேவையில்லை.

பெரியாரும், அம்பேத்கரும் முயற்சித்த பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்பதை 1989இல் சட்டமாக நிறைவேற்றிக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை நிறைவேற்றிக் கொடுத்தவரும் கலைஞரே. ஆனால், மத்தியில் நம்மை ஆட்சி செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசோ, நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தைத் தேர்தல் ஆதாயத்திற்காக 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக நிறைவேற்றிவிட்டு, 2030ஆம் ஆண்டுதான் அச்சட்டம் அமலுக்கு வரும் என்று புருடா விட்டுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் எந்த ஆட்சி, எந்தக் கட்சி பெண்களுக்கு முக்கியத்தும் கொடுக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனது தொகுதியைச் சேர்ந்த உங்களுக்கு என்ன தேவை இருந்தாலும், அதைத் தெரியப்படுத்த “நம்ம எக்மோர்” (Namma Egmore) என்கிற செயலி என்னால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் செயலியை உங்கள் போனில் பதிவிறக்கம் செய்து, உங்கள் குறைகள், கோரிக்கைகள் என அனைத்தையும் அதில் பதிவேற்றினால், நேரடியாக எனது கவனத்துக்கு வந்துவிடும்.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் ஆட்சி இந்த திராவிட மாடல் ஆட்சி. நீங்கள் கேட்காமலேயேதான் மகளிருக்கான எண்ணற்றத் திட்டங்களை முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார் என்றார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி நகரம், 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கே. நாகூர்மீரான் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆர்.அன்பரசு ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.